# நாச்சிப்புதூரில் ஆண்கள் விளையாட்டுகள்

*பெ. அபிநயா*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783042

**ஆய்வுச் சுருக்கம்**

*விளையாட்டு என்பது ஒருவரின் செயல்பாட்டினை பொறுத்தது. விளையாட்டில் ஈடுபடுவோரின் மனநிலையை பொறுத்து அமையும். விளையாட்டில் சில சட்டதிட்டங்கள் உண்டு. விளையாட்டு வெறும் பொழுதுபோக்காக மட்டும் இல்லாமல், மனநலம், உடல்நலம் போன்றவைகளை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள உதவுகிறது. விளையாட்டு பயிற்சி அளிக்கக்கூடிய களம் என்று கூறுவர். விளையாட்டு தனிமனித விளையாட்டு, குழு விளையாட்டு, அக விளையாட்டு, புற விளையாட்டு என்றும் கூறுவர். அவ்வகையில் நாச்சிப்புதூரில் உள்ள சிறுவர்கள், ஆண்கள் விளையாட்டுகளான மட்டைப்பந்து, சிலம்பு, ஜல்லிக்கட்டு, இளவட்டக்கல், கோலிக்குண்டு, கிலிகிலுப்பையாடல் விளையாட்டு, கயிறு இழுத்தல், உரியடி போன்ற விளையாட்டுகள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *நாச்சிப்புதூர், விளையாட்டு, ஆண்கள், சிறுவர்கள்.*

## முன்னுரை

*மனித சமுதாயம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது விளையாட்டுகள். மனிதனின் முதல் பொழுதுபோக்காக விளையாட்டுகள் தோன்றின. விளையாட்டுகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும் ஒரு செயல். மனிதன் இன்றைய நிலையை அடைவதற்கு முன்பு பல்வேறு நிலைகளை பல்வேறு காலகட்டங்களில் கடந்து முன்னேறி உள்ளான். வேட்டையாடி வாழ்ந்த காலத்திலும் நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கிய போதும் வேட்டை, போர் போன்றவற்றில் ஈடுபட்டான். அதற்கென பல பயிற்சிகளில் ஈடுபட்டான். சமுதாய மாற்றத்தின் காரணமாக அப்பயிற்சிகள் விளையாட்டுகளாக உருவாகின. நாட்டுப்புறவியலின் ஒரு கூறாக நாட்டுப்புற விளையாட்டு உள்ளது. அவற்றுள் நாச்சிப்புதூர் மக்களின் ஆண்களின் விளையாட்டை மட்டும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## நாச்சிப்புதூர் அறிமுகம்

*நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உத்திரகடிகாவல் பஞ்சாயத்தில் அமைந்துள்ள ஒரு குக்கிராமம் நாச்சிப்புதூர் ஆகும். கொல்லிமலைக்கு செல்லும் வழியில் காரவள்ளி என்ற ஊரின் அருகில் கொல்லிமலை அடிவாரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.*

## ஆண்கள் விளையாட்டுகள்

*“ஆண்கள் விளையாட்டுகள் பெரும்பாலும் வெளியில் சென்று விளையாடும் விளையாட்டாகவே உள்ளன. இது அவர்களின் மன மகிழ்ச்சியை தூண்டும் விளையாட்டாக அமைகின்றன. இது அவர்களின் உடல் திறன், அறிவுத்திறன், வாய்ப்பு நிலை வாய்ந்த விளையாட்டு உள்ளன.*[1]

*ஆண்கள் அவர் விளையாடும் விளையாட்டுகளை எவ்வித சலிப்பும் இன்றியும் விளையாடுகின்றனர். ஆண்கள் சிலம்பம், மட்டைப்பந்து, ஜலலிக்கட்டு, இளவட்டக்கல் தூக்கும், ஓடிப் பிடித்து விளையாடுதல், கிலிகிலுப்பையாடல் விளையாட்டு,*

கபாடி போன்ற விளையாட்டுகள் புற விளையாட்டு உள்ளன.

## ஜல்லிக்கட்டு விளையாட்டு

ஜல்லிக்கட்டு ஆண்களின் புற விளையாட்டுகளில் ஒன்றாகும். இவ்விளையாட்டில் நாச்சிப்புதூரில் உள்ள ஆண்கள் பெருமளவு ஜல்லிக்கட்டு விளையாட்டில் பங்கேற்கின்றனர்.

ஏறு தழுவுதல், மஞ்சுவிரட்டு அல்லது ஜல்லிக்கட்டு போன்றவை இதன் வேறு பெயர்களாகும். மரபு வழி சார்ந்த விளையாட்டுகளில் ஒன்று. மஞ்சுவெட்டு, மஞ்சுவிரட்டு என்று நாச்சிபுதூர் மக்கள் அழைக்கின்றனர்.

ஏறு என்பது காளை மாட்டை குறிக்கும். மாட்டின் திமிலை பிடித்து அடக்குவது ஜல்லிக்கட்டு என்பதாகும்.

**நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,**
**மாறுவதற்கு சிலைபாவை**
**துலங்கு திமில் நல்ஏற்றினம் பல களம்போகும்**
**மல்லன் வனப்பு ஒத்தன்[2]**

என்ற கலித்தொகை வரிகள் காலையில் அசைவுகளை பற்றி கூறுகிறது

## ஓடிப் பிடித்து விளையாடுதல்

சிறுவர்கள் விரும்பி ஆடும் விளையாட்டுகளுள் ஒன்று ஓடிப் பிடித்து விளையாடும் விளையாட்டு. அவர்களின் சுறுசுறுப்பை அதிகரிக்க தூண்டும் ஒரு விளையாட்டாகும்.

ஒருவர் துரத்திக் கொண்டே ஓடுவர், மற்ற சிறுவர்கள் பிடிபடாமல் ஓடிக்கொண்டே இருப்பார். அவ்வாறு பிடிபட்டுவிட்டால் அவர் ஆட்டத்தில் இருந்து விலக்கப்படுவார்.

**ஓடி விளையாடு பாப்பா - நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா - கூடி**
**விளையாடு பாப்பா[3]**

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப நச்சுப்புதூரில் உள்ள சிறுவர்கள் ஓடிப் பிடித்து விளையாடும் விளையாட்டில் பல உள்ளன.

## கிலிகிலுப்பையாடல் விளையாட்டு

கிளுகிளுப்பை என்பது ஓசை வரக்கூடிய சிறிய பொம்மைகளை வைத்து விளையாடும் விளையாட்டு.

இவ்விளையாட்டு முறை சங்க காலத்தில் இருந்தது. உப்பு வணிகர்களோடு சென்ற குழந்தைகள் முத்துக்களை கிளிஞ்சல்களில் இட்டு விளையாடினர் என்பதை கீழ்கண்ட பாடல் அடிகள் தெரிவிக்கின்றன.

**நோன்பகட் டுமணர் ஒழுகையோடு வந்த**
**மகாஅர் அன்ன மந்தி மடவார்**
**நகா அர் அன்ன நளிநீர் முத்தம்**
**வாள்வாய் எறிந்தின் வயிற்றகத் தடக்கி**
**....................**
**கிணர்பூண் புதல்வரோடு கிலி கிலியாடும்[4]**

அவ்வகையில் நாச்சிப்புதூரில் விளையாடப்பட்ட கிலிகிலுப்பை விளையாட்டு சங்க காலத்திலும் இருந்திருப்பதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

## கபாடி

ஆண்கள் ஆடும் கபாடி விளையாட்டு மிகச் சிறந்த உடல் திறன் விளையாட்டு ஆகும். உடல் திறனோடு மூச்சுப் பயிற்சியை வளர்க்கும் களமாகவும் அமைகிறது.

கபாடி ஆடுபவர் "கபாடி கபாடி" என்று பாடிக் கொண்டே வரவேண்டும். இதனால் அவரின் செயல், வேகம், குறி, எதிராளியின் மேல்நோக்கி இருக்கும். இது ஒரு குழு சார்ந்த விளையாட்டு. ஒரு போட்டியில் இரு குழுக்கள் இடம்பெறுகின்றன. ஒரு குழுவிற்கு 12 பேர் வீதம் 24 பேர் கொண்டு கபாடிக் குழு அமைகிறது.

கபாடி விளையாடும் போது பாடல்களைப் பாடியும் விளையாடுவார்.

**நான் தான் வீரன்டா**
**நல்லமுத்து பேரன்டா,**
**வெள்ளி சிலம்பெடுத்து**
**.**
**.**
**.**
**நட்டு வச்சேன் டா**
**பட்டுப்போச்சுடா**

*போச்சுடா*
*போச்சுடா*[5]
*என்ற பாடலை பாடி கொண்டே எதிரணியை தொடுவர்.*

**சிலம்பு விளையாட்டு**

*சிலம்பம் என்பது ஒரு தடியடி விளையாட்டு. தமிழரின் தற்காப்பு கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டுகளின் ஒரு விளையாட்டாகும். சிலம்பாட்டம் என்றும், சிலம்புலி ஆட்டம் என்றும் கூறுவர். இவ்விளையாட்டை ஆடவர்கள் விரும்பி ஆடுவர்.*[6]

*மெய்ப்பாடம், உடற்கட்டு, மூச்சுப் பயிற்சி, குத்துவரிசை, தட்டு வரிசை, அடி வரிசை, பிடிவரிசை, சிலம்பாட்டம், வர்மம் முதலானவை சிலம்ப கலையின் முக்கிய கூறுகளாக உள்ளன. மெய்ப்பாடம் என்பது சிலம்புக் கலையின் முதலாவது பயிற்சியாகும்.*

**மட்டைப்பந்து விளையாட்டு**

*மட்டைப்பந்து விளையாட்டு நாச்சிப்புதூரில் உள்ள ஆண்கள், சிறுவர்கள் தெருக்களிலும் வீட்டிற்கு பின்புறத்திலும் விளையாடுகின்றனர். மட்டைப்பந்து விளையாடும் போது மெதுவான காற்று வேகம் மற்றும் ஒப்பீட்டளவில் லேசான தன்மை காரணமாக அடிக்க எளிமையாக இருக்கும். அவ்வகையில் மட்டைப்பந்து விளையாடுவதன் மூலம் உடல் சுறுசுறுப்பும் மன மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.*

**இளவட்டக்கல்**

*தமிழகத்தின் பெரும்பாலான கிராமங்களில் உருண்டையான வடிவில் இளவட்டக்கல் கிடைப்பதை பார்த்திருப்போம். ஊருக்கு பொதுவான இடத்தில் கிடக்கும் அந்தக் கல்லின் பண்பாட்டுப் பின்னணி இன்றைய தலைமுறைக்கு தெரிவதில்லை.*

*இளவட்டக்கல் 65, 85, 114, 129 ஆகிய கிலோ எடைக்கலில் இருக்கின்றன. இளவட்டக்கல் ஒரு எடை தூக்கும் விளையாட்டு. விழாக் காலங்களில் இந்த போட்டி நடைபெறும். குறிப்பிட்ட கல்லை தலைக்கு மேல் தூக்கி காட்டும் இளைஞனுக்கு தன் பெண்ணை மணமுடித்து தருவது தமிழரின் ஒரு சார் இடையே காணப்படும். இளவட்டங்கள் இளைஞர்கள் தூக்குங்கள் இளவட்டக்கல் என காரண பெயர் பெற்றது.*

**கோழி கூண்டு விளையாட்டு**

*கோழிக்குண்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளில் ஒன்று. இந்த விளையாட்டை சிறுவர்கள் மட்டுமே விளையாடுவார். அவ்வகையில் நாச்சுப்புதூரில் உள்ள கிராமப்புற சிறுவர்கள் கோழி குண்டு விளையாட்டை விளையாடுகின்றனர்.*

*கோலிகுண்டு விளையாடுவதற்கு குழிப்போட்டும், கோடு போட்டும் இரு வேறு வகைகளில் அமைக்கப்படும். குழி குதிக்காலால் திருகிக் குண்டு தங்கும் ஆழத்திற்கு அமைக்கப்படும்.*

*கட்டைவிரலை நிலத்தில் ஊன்றி, நடுவிரல் விசையை கொண்டு மற்றொரு கை பிடித்து இருக்கும் கோழிக்குண்டை அடிப்பர். இவ்விளையாட்டு இலக்கியத்திலும் காணப்பட்ட மிகவும் தொன்மையான விளையாட்டு என்பதற்கு,*

***அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய***
***நூலின்றிக் கோட்டி கொளல்***[8]

*என்ற குறள் சான்றாய் அமைகிறது பொதுவாக விளையாட்டில் வெற்றி பெற்றவரை பலம் பெற்றவர் என்று கூறுவது வழக்கம்.*

**முடிவுரை**

*பெயர், புகழ், பணம் பெற கல்வி மிகவும் அவசியம். அதேபோல் ஆரோக்கியமான உடலும் மனமும் இருக்க, ஒருவர் எந்த வகையான உடல் செயல்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். அதற்கு விளையாட்டு சிறந்த வழி ஆகும். விளையாடுவதன் மூலம் உடல், உள்ளம் மிகவும் புத்துணர்ச்சியாக இருக்கும். ஆண்கள் அதிகம் விளையாட்டில்*

ஈடுபடுவதன் மூலம் அதிக அளவில் உடல் வலிமை பெறுவரை என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சக்திவேல். சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.216.
2. முனைவர். அ. விசுவநாதன், கலித்தொகை, ப.102.
3. பாரதியின் கவிதைகள், பக்.211-1.
4. சிறுபாணற்றுப்படை, பா.55-61.
5. தகவலாளர். ராஜேஸ்வரி, பெண், வயது 38, நாச்சிப்புதூர்.
6. தகவலாளர். நல்லம்மாள், பெண், வயது. 72, நாச்சிப்புதூர்.
7. தகவலாளர். குமார், ஆண், வயது 32, நாச்சிப்புதூர்.
8. அறவாணன், க.ப, திருக்குறளும் பொருளும், குறள்.401

**துணை நூற்பட்டியல்**


1. அறவாணன். க.ப, திருக்குறளும் பொருளும், தமிழ்க்கோட்டம், 2 முனிரத்தினம் தெரு அய்யாவு குடியிருப்பு அமைந்தகரை, சென்னை.
2. சக்திவேல். சு.டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.
3. விசுவாதன். அ. முனைவர், கலித்தொகை மூலமும் உரையும், நீயூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, ஏப்ரல் - 2004.
4. https:// www.goodreads.com.